மாநகராட்சி பள்ளி மாணவர்கள்

# மெட்ரோ ரெயில் கல்விப் பயணம்!

## மாதந்தோறும் சிறப்பு ஏற்பாடு!!

சென்னை, நவ.21–
சென்னை மாநகராட்சி மாணவர்களுக்கு மெட்ரோ ரெயில் கல்விப்பயணம் மாதந்தோறும்நடத்துகிறது.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மெட்ரோ ரெயிலைப் பற்றியும் அதில் உள்ள வசதிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்தும் அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளின் மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சியில் சென்ட்ரல் மெட்ரோவில் இருந்து கோயம்பேடு வழியாக விமான நிலையம் பரங்கிமலை மற்றும் வண்ணாரப்பேட்டையில் இருந்து ஏ.ஜி.டி.எம்.எஸ். வழியாக விமான நிலையம் வரை மெட்ரோ ரெயிலில் கல்விப் பயணம் ஏற்பாடு செய்து அழைத்துசெல்லப்படுகின்றனர்.

கல்வி பயணங்கள் மாதம்தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மெட்ரோ ரெயிலின் சிறப்பு அம்சங்களைபற்றி மாணவர்களுக்கு விளக்கப்பட்டு வருகிறது. கடந்த 2018–19ம் கல்வி ஆண்டில் மொத்தம் 31.178மாணவ, மாணவியர்கள் மெட்ரோ ரெயிலில் பயணித்து பயன் பெற்றனர்.

2019–20ம் ஆண்டிற்கான கல்விப்பயணம் 2019 ஜூன் 4முதல்தொடங்கியது. 2019 செப்டம்பர்மற்றும்அக்டோபர் மாதத்தில் மொத்தம் 6.641மாணவர்கள்இந்தகல்விப் பயணத்தை மேற்கொண்டனர். ஜூன் 2019 முதல் அக்டோபர் 2019 வரை மொத்தம் 20,195 மாணவ மாணவியர்கள் பயணித்து மகிழ்ந்துள்ளார்கள்.



சென்னை மெட்ரோ ரெயிலில் சென்னை மாநகராட்சி பள்ளி மாணவர்கள் மெட்ரோ ரெயில் விழிப்புணர்வு பயணம் செய்யும் காட்சி.